**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.81/2026**

ம.சா.1 அனுமுத்து த/பெ ராஜி நாள் : 13.07.2026

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தது என்னுடைய மகன் விக்னேஷ். அவருக்கு திருமணம் ஆகவில்லை. விபத்தின்போது இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றார். இந்த விபத்து புதுப்பேட்டையிலிருந்து திருப்பத்தூர் நோக்கி வரும்போது வேடி நகர் மாரியம்மன் கோவில் அருகே நடந்தது. அந்த சாலை இரண்டு பேருந்துகள் செல்லக் கூடிய அகலமான சாலை என்றால் சரிதான். என் மகன் சாலையில் வரும் வாகனங்களை கவனிக்காமல் திடிரென சாலையின் குறுக்கே வந்நததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மகனின் அஜாக்கிரதையால் ஏற்பட்டதால் நஷ்ட ஈடு கோர முடியாது என்றால் சரியல்ல. தலையில் ஏற்பட்ட காயங்களால்தான் இறப்பு என்றால் சரிதான். விபத்தின் போது தலைகவசம் அணிந்து சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருந்தாலும் தலையில் காயங்கள் ஏற்பட்டு இறப்பு நிகழ்ந்திருக்காது என்றால் தெரியவில்லை. மனு 203 நாள் கழித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 22 மற்றும் 23 பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்கள் என்றும் Catering படித்திவிட்டு சென்னையில் ரூ.35,000/- சம்பாதித்து வந்தார் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த ஆவணங்கள் வழக்குக்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 22 மற்றும் 23 இரண்டிலும் சம்பளம் குறித்து எந்த தகவலும் இல்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றும் என் மகனின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டதால் அவருடைய அஜாக்கிரதையை பொறுத்து தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.